மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை – 600 006
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்

ந.க. எண். 604/ C2/ TEP /2020 நாள் : **28 .11.2020**

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2020–21 ஆம் கல்வி ஆண்டு – Quality Components – Teacher Exchange Programme – மாவட்டங்களிலிருந்து ஆசிரியர்களை தேர்வு செய்வதற்கான வழிகாட்டுதல் – சார்பு.

பார்வை : மத்திய கல்வி அமைச்சகம், திட்ட ஏற்பளிப்புக் குழு கடிதம் எண். F.No.28–2/ 2020–IS–9, நாள் 15.07.2020, (வ.எண் –72 ‘g’)

*****

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ், 2020 – 21 ஆம் கல்வியாண்டில் பார்வையில் காணும் மத்திய கல்வி அமைச்சகத்தின் திட்ட ஏற்பளிப்புக் குழுக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளின்படி, Quality Components Secondary என்ற தலைப்பில், அரசுப் பள்ளிகளில் இடைநிலை அளவில் கல்வி பயிற்றுவிக்கும் அறிவியல் மற்றும் கணித பட்டதாரி, ஆசிரியர்கள் களப்பணி மேற்கொள்ளும் வகையில் Teacher Exchange Programme என்ற செயல்பாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஒரு மாவட்டத்திற்கு 20 ஆசிரியர்கள் வீதம் 32 மாவட்டங்களிலிருந்து மொத்தம் 640 ஆசிரியர்களுக்கு (ஒர் ஆசிரியருக்கு ரூ. 3000/– வீதம்) ரூ.19.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

Teacher Exchange Programme - செயல்பாட்டின் உயரிய நோக்கம், ஆசிரியர்களும் அறிவியல் மற்றும் கணிதம் சார்ந்த உயர் கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சிக்கூடங்கள், அருங்காட்சியங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு களப்பணி மேற்கொள்வதன் மூலம் புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பங்களை பற்றிய விவரங்கள் மற்றும் உயர்கல்வி சார்ந்த வாய்ப்புகள் ஆகியவைப் பற்றிய விழிப்புணர்வை மாணவர்களிடையே கொண்டு சேர்த்து வகுப்பறையில் ஆரோக்கியமான கற்றல் – கற்பித்தல் சூழலை உருவாக்குவது ஆகும்.

இச்செயல்பாட்டிற்காக ஒரு மாவட்டத்திற்கு 20 பட்டதாரி ஆசிரியர்கள் (10அறிவியல்+10கணிதஆசிரியர்கள்) வீதம் 32 மாவட்டங்களுக்கு மொத்தம் 640 ஆசிரியர்களைத் தெரிவு செய்து கீழ்கண்ட படிவத்தில் (in **Excel** format only) அனுப்புதல் வேண்டும்.

**20 Teachers - BT Asst (10 Maths Teachers and 10 Science Teachers)**
**Name of the District :**

| S.No | Name of the Teacher | Name of the School | Age | Male/Female | Subject | Mobile No | Aadhaar ID |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |

Edit with WPS Office

இவ்வாசிரியர்கள் அனைவரும், நேரடிக் களப்பணி மேற்கொள்ளத் தேவையான ஆராய்ச்சிக்கூடங்கள், அருங்காட்சியங்கள் மற்றும் பயிற்சி அரங்கம் போன்ற அனைத்து வசதிகளும் கொண்ட தேசிய உயர் கல்வி நிறுவனங்கள் உள்ள இடத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர். ஆசிரியர்கள் அழைத்துச் செல்லப்படும் இடம், நாள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் போது கீழ்க்காணும் வழிகாட்டுதல்களை பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறது.**

1. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் வாயிலாக மேற்கொள்ளப்பட்ட RAA, IMPART – செயல்பாடுகளில் அதிக ஈடுபாட்டுடன் பங்கேற்ற ஆசிரியர்கள்.
2. பொதுத்தேர்வின் போது அதிக தேர்ச்சி சதவீதம் வழங்கிய ஆசிரியர்கள்.
3. மாவட்ட, மாநில அளவில் நடந்த அறிவியல் கண்காட்சி, புதிர் போட்டியில் ஆர்வமும், ஈடுபாடும் கொண்டு மாணவர்களுக்கு வழிகாட்டி மேலும் கலந்து கொண்ட ஆசிரியர்கள்.
4. ஆசிரியர் பணியிடைப் பயிற்சியில் கருத்தாளர்களாகச் செயல்படும் ஆசிரியர்கள்.
5. NMMS, TRUST, NTSE, Olympiad போன்ற போட்டித் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள்.
6. (a) இவ்வாறு ஆசிரியர்களைத் தேர்வு செய்யும் போது அனைத்து கல்வி மாவட்டங்களில் இருந்தும் ஆசிரியர்களைச் சமமாக தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

   (b) கடந்த ஆண்டுகளில் இந்நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களை மீண்டும் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கக் கூடாது.
7. தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு ஆசிரியர்களை தெரிவு செய்யும்போது 56 வயதுக்கு மிகாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

மேற்கண்ட வழிகாட்டுதல்களின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலை, மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளரது ஒப்புதலுடன் கொடுக்கப்பட்ட படிவத்தில் மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு 30.11.2020 க்குள் rmsatamiltrg@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு தவறாமல் அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

for மாநில திட்ட இயக்குநர்

பெறுநர்:
அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்/முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

Edit with WPS Office